
# லண்டன் முரசு

Vol. 4 LONDON MURASU 19th AUGUST 1973 No. 5



போர்ட் லூயி நகர மண்டபம்



# CEYLON TEA CENTRE

We operate Restaurants in the following centres:-

22 Regent Street, Piccadilly Circus, London, S.W.1.
129 Buchanan Street, Glasgow, C.1.
Peter House, Oxford Street, Manchester, M1 5AN.
36 The Headrow, Leeds 1.
22 Priory Ringway, Birmingham 4.
Eastgate House, Paris Street, Exeter.

Why not bring your friends for lunch, afternoon tea, or a quick cup?

Pure Ceylon Teas are ideal presents any time of the year and a selection including the following are available in all the foyers.

CEYLON

Four Fine Ceylon Teas - ¼ lb cartons

Dimbulla, Uva, Kandy & Nuwara Eliya
Composite Gift Pack of all four i.e. 1 lb nett

½ lb caddy - attractive Kandyan Dancer design
36 Tea Bag caddy - similar design as for ½ lb.
1 lb and 3 lb miniature chests
18 Tea Bag cartons

# AIR CARGO & TRAVEL PLANNERS LTD.

SPECIALISTS IN LOW COST JET TRAVEL

TO: COLOMBO
SINGAPORE
KUALALUMPUR
DJARKATA

INSTANT CREDIT

FIVE FLIGHTS PER WEEK

SPECIAL ARRANGEMENTS FOR
JULY, AUGUST AND DECEMBER

*Contact Mr. Pathy at*

4th Floor 93-97 REGENT STREET, LONDON, W.1
Phone: 01-437 9670/3693 Tube: Piccadilly

# லண்டன் முரசு

தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை

— பாரதிதாசன்

முரசு 4 ஆவணி திருவள்ளுவர் ஆண்டு 2004 ஆகஸ்டு 19, 1973 ஒலி 5


| | | | |
|---|---|---|---|
| ஆசிரியருரை | 2 | அன்புள்ள ஆசிரியருக்கு | 16 |
| தாய்நாடுகளின் செய்திகள் | 3 | எம் 1ல் ஒரு கார் விபத்து | 18 |
| நம்மைச் சுற்றிய உலகம் | 6 | சிறப்பு நாட் குறிப்பு | 20 |
| மேற்கு நாடுகளின் செய்திகள் | 9 | கவிதை | 21 |
| உள்ளிப் பூண்டு விவகாரம் | 11 | FINAL EXAMS | 23 |
| நாயடிக்கும் தடி | 13 | NEWSGRAM | 25 |
| நிழற்படத்தில் செய்திகள் | 14 | CLASSIFIED ADVERTISEMENTS | 28 |



கௌரவ பொறுப்பாசிரியர்

ச.ம.சதானந்தன் B.Sc.,(Econ)(Lond).

கௌரவ உதவியாளர்கள்:
ஜே.வீ.ஆனந்தராஜா
க.ஜெகதீஸ்வரன்
சி.சிவசோதி
பரீ.வேங்கடேசன் B.Sc.,A.I.C.
ஜெ.சிவாஜீ B.Sc.,(Eng.)

கௌரவ ஓவியர் : கோ.ஜம்பு

கௌரவ நிருபர் / பிரதிநிதிகள்

தமிழ்நாடு : டி செல்வராஜன்
மலேசியா, சிங்கை : பொன் பாலகோபால் B.A.,B.L.
கேரளா : எஸ் எஸ் மணி B.Com.
மைசூர் : ஆர் கண்ணன் B.A.,B.O.L.,B.T.
பிரான்சு : ஜமாலுதின் M.P.E.
மான்செஸ்டர் : ஆர் எல் சிவம்
மதுரை, இராமநாதபுரம் : ஆ ஞானசேகரன் M.Sc

மேற்கு நாடுகளின் முதன்முதல தமிழ்த்திங்கள் ஏடு
இலாப நோக்கின்றி நடத்தப்படும் பிரசுரம்
லண்டன் முரசு பிரசுரத்தால் வெளியிடப்பட்டது

# முன்னேற்றப் பாதையில்....

செப்டம்பர் திங்கள் முதல் கள்ளுக்கடைகளை மீண்டும் மூடி தமிழக மக்களின் நல் வாழ்வை நிலைநாட்ட முயன்று வரும் தமிழக அரசு தமிழகத்தை மேலும் முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருப்பதைக் காண்கிறோம்.

தமிழக அரசில் இருந்த ஊழல்களைக் களைவதற்கான முதல்படியாக அதிகாரிகளுக்கு சில கண்டிப்பான அறிவுரைகளை வழங்கியுள்ளார் தமிழக முதலமைச்சர். அதன்படி செல்வாக்குப் பெற்ற தனி நபர்களோ அல்லது மக்கள் பிரதிநிதிகளோ அரசின் அதிகாரிகளை அணுகி நியாயத்திற்கு முரண்பாடான செயல்களைச் சாதிக்க முடியாது. மீறி நடக்கும் அதிகாரிகள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என முதலமைச்சர் அறிக்கை விடுத்துள்ளார். இதன் மூலம் அரசின் அதிகாரிகளின் கையை பலப்படுத்தியுள்ளார் முதல்வர். தமிழக அரசின் இன்னொரு வெற்றி— அம்மாநிலத்தின் உணவு நிலைமையே. இந்தியாவில் அநேக மாநிலங்களில் கடுமையான உணவுப் பற்றுக்குறையினால் பஞ்சமும் பட்டினியும் நிலவி வருகின்றது. இந்த நிலைமையில் தேவையான அளவு அரிசி கிடைத்து வருவதுடன் மட்டுமல்லாது ஏனைய மாநிலங்களுக்கும் அரிசி வழங்கும் அளவுக்கு உபரி நிலையையும் பெற்றுள்ளது தமிழகம். இது தமிழக அரசின் பசுமைப்புரட்சியின் ஒரு மகத்தான வெற்றி என்று கூறலாம் அல்லவா!

முன்னேற்றப்பாதையில் தமிழகத்தைக் கொண்டு செல்ல முயற்சிக்கும் தமிழக அரசிற்கு சில வேண்டுகோள்கள். அரசின் ஊழல்களைக் களையும் முயற்சியில் முழுமையான வெற்றி பெற வேண்டுமானால் நேர்மையோடு செயல்படும் அதிகாரிகளுக்கு எதிராக கட்சியினர் எவ்வித மான புகாரும் அளிக்க முடியாது என்ற ஓர் தீர்மானத்தைக் கொண்டு வரவேண்டும். இதன் மூலம் அதிகாரிகளுக்கு மேலும் ஒரு படி தைரியத்தை அரசு அளிக்கலாம். மது விலக்குக் கொள்கையைப் பொறுத்த அளவில் அது முழுமையாக அமுலாக்கப்பட வேண்டும். அரசு சாராயக்கடைகளையும் மது பானக்கடைகளையும் உடனடியாக முடியாக வேண்டும். அடுத்து மது விலக்கு அமுலிலிருக்கும்போது கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் அனைவரையும் பிடிப்பதிலும், தண்டிப்பதிலும் தயக்கம் காட்டாது, அதற்கான முழுமையான அதிகாரங்களை காவல்துறை அதிகாரிகளுக்கு அளித்தல் மிக அவசியமாகும். தமிழகத்தில் ஏற்பட்டுள்ள உணவு உபரி நிலை நிரந்தரமாக நீடிக்க வேண்டுமானால் தமிழக விவசாய முறைகளில் கூடியளவு நவீன கருவிகள் பயன்படுத்தப்படவேண்டும் தண்ணீர் இறைப்பு கருவிகளிலிருந்து உழுது பண்ணிடும் கருவிகள் வரை அனைத்தையும் கூடியவளவில் மாநிலம் முழுவதிலும் பயன்படுத்த வழிவகைகளைச் செய்ய வேண்டும் அரசு. முன்னேற்றப்பாதையில் தமிழகத்தைக் கொண்டு சென்றோம் என்று அதன் பின்னர் தமிழ் மக்கள் முன் துணிவோடு நிற்கலாம் அல்லவா தற்போதைய அரசு!!

# தாய் நாடுகளின் செய்திகள்

## நான்காவது உலகத் தமிழ் மாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெறும்

1974ம் ஆண்டு ஜனவரி மாதம் நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு நடைபெறும் என்று கொழும்பில் கூடிய தமிழாராய்ச்சிக் கழகத்தின் இலங்கைக்கிளை முடிவு செய்துள்ளது. 1973ம் ஆண்டு ஜனவரி மாதம் நடைபெறுவதாக இருந்த இம்மாநாடு பின்னர் ஒத்திப் போடபட்டது. மேலும் இம்மாநாடு கொழும்பில் நடைபெறுமா அல்லது யாழ்ப்பாணத்தில் நடை பெறுமா என்று நிச்சயமாக தெரியாமலிருந்தது. இப்போது யாழ்ப்பாணத்தில் தான் நடைபெறும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## சங்க கால சேரர் கட்டிடம் கண்டுபிடிக்கப்பட்டது

தமிழ் நாட்டில் திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த கரூர் என்னுமிடத்தில் பூமிக்கடியில் சுமார் 10அடி ஆழத்தில் செங்கற்களால் கட்டப்பட்ட கட்டிடம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது அரசினர் தொல்பொருள் ஆய்வுத் துறையினரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சுவற்றின் கனம் மூன்றரை அடி. செங்கல் துண்டுகளைப் பரப்பி, களி மண்ணை அதன் மேல் போட்டு அவற்றிற்கும் மேலே வெண்கற்களைப் பரப்பி சுவர் எழுப்பியுள்ளனர். சங்க காலத்தில் சேரர் ஆண்ட சமயங்களிலேயே அஸ்திவாரம் போட்டு கட்டிடம் கட்டும் முறை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்பது இதன் மூலம் அறியப்படுகிறது.

## மேற்கு வங்கத்திற்கு தமிழக அரிசி

மேற்கு வங்காளத்தில் ஏற்பட்டிருக்கும் உணவுப் பற்றுக்குறையைச் சமாளிக்க தமிழகத்திலிருந்து 50,000 டன்கள் அரிசி கொடுத்து உதவுமாறு கோரிக்கை விடுத்துள்ளார் மேற்கு வங்காளத்தின் முதல் அமைச்சர். இது சம்பந்தமாக தமிழக முதல்வரைச் சந்தித்துப் பேசியுள்ளார் மேற்கு வங்காள உணவு அமைச்சர் திரு. மைத்ரா.

## குமரி மாவட்டத்திலிருந்து அரிசி கடத்தல்

உணவுப் பற்றுக்குறையுள்ள கேரள மாநிலத்திற்கு தமிழகத்தின் குமரி மாவட்டத்திலிருந்து அரிசி கள்ளத் தனமாக கடத்தப்பட்டு வருகின்றது. இதைத் தொடர்ந்து தமிழகத்தின் மற்ற மாவட்டங்களிலிருந்து குமரி மாவட்டத்திற்கு அரிசி கொண்டு போக முடியாது எனத் தடை விதித்துள்ளது தமிழக அரசு. இதன் விளைவாக குமரி மாவட்டத்தில் அரிசி விலை படி ஐந்து ரூபாயாக உயர்ந்துள்ளது.

## இலங்கையின் உணவு நிலை கவலைக்கிடமாகியுள்ளது

இலங்கையில் உணவு நிலை கவலைக்கிடமாகியுள்ளது. இதைத் தொடர்ந்து அவசர நடவடிக்கைகளை எடுத்து வருகிறது இலங்கை அரசு. போர்க்காலத்தில் எடுக்கப்படும் அளவில் செயலாற்ற முன்வந்துள்ளது விவசாய அமைச்சகம். உலகில் ஏற்பட்டுள்ள அரிசி உணவுப்பொருள் பற்றுக்குறையே இந்நிலைக்குக் காரணம் என்று தெரிய வந்துள்ளது.

## கல்லோயாவில் சிங்கள ஆக்கிரமிப்பு

தலை முறை தலை முறையாக இலங்கையின் கல்லோயாவில் குடியேறி விவசாயம் செய்து வாழ்ந்து வந்த தமிழ்க்குடி மக்களும் தமிழ்ப் பேசும் முஸ்லிம் மக்களும் சிங்களவர்களின் தீயிடுதல், கொலை கொள்ளை போன்ற வன்முறைக் காரியங்களினால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இது குறித்து இலங்கை அரசிடம் புகார் எழுப்பியுள்ளார் கிழக்கிலங்கையின் நிந்தாவூர் எம்.பி. திரு. முஸ்தபா.

## தமிழ் நாட்டில் மின் வெட்டு நீக்கப்பட்டது.

தமிழகத்தில் அமுலில் இருந்த மின்சார வெட்டு ஜூலை 17 முதல் அடியோடு நீக்கப்பட்டுள்ளது. தென் மேற்குப் பருவ மழை பெய்துள்ளதையொட்டி நீர்த்தேக்கங்களில் நிலைமை சீர்பட்டிருப்பதாலும், நெய்வேலி உட்பட அனல் மின் நிலையங்களின் மின் உற்பத்தித் திறனை மனதில் கொண்டும் மின்சார வெட்டு நீக்கப்பட்டுள்ளதாக முதல்வர் கருணாநிதி தெரிவித்துள்ளார். மீண்டும் மின்வெட்டு ஏற்படலாமா என நிருபர்கள் கேட்டதற்கு நாம் நீர்விசை மின் நிலையங்களைப் பெரிதும் நம்பியிருக்க வேண்டியிருப்பதால் எதிர்காலத்தில் ஒரு குறிப்பிட்ட சதவீதம் மின்சார வெட்டு ஏற்படலாம் என எதிர்பார்க்கலாம் என்று முதலமைச்சர் குறிப்பிட்டார்.

## தமிழ் ஈழத்துக்குத் தனி அரசியல் நிர்ணய சபை.

தமிழ் ஈழத்துக்கு தனியான ஒரு அரசியல் நிர்ணய சபை ஏற்படுத்தும் பொருட்டு ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட அதிகார சபை விரைவில் கூடவிருக்கின்றது. தமிழ் ஈழத்துக்கு தனியானதொரு அரசியல் நிர்ணய சபையை ஏற்படுத்தி தனியான அரசியல் முறையைப் பிரகடனம் செய்ய வேண்டும் என்ற முன்னாள் வவுனியா எம்.பி. திரு. சுந்தரலிங்கத்தின் திட்டம் இக்கட்டத்தில் பரிசீலிக்கப்படும் என்று தெரிய வந்துள்ளது.

## இராமேசுவரத்துக்குச் செல்ல கடல் மீது பாலம்.

இராமேசுவரத்துக்குச் செல்ல பாம்பனுக்கும் மண்டபத்துக்குமிடையே ஒன்றரை மைல் நீளமுள்ள பாலமொன்று அமைக்கப்படவிருக்கிறது. 5 கோடி 33 லட்சம் ரூபாய்கள் செலவிலான இந்தப் பாலம் அமைக்க 4 ஆண்டுகள் ஆகும். இந்தத் தகவலை தமிழ் நாட்டு தேசிய நெடுஞ்சாலைத் துறை தலைமைப் பொறியியலாளர் திரு. மகாதேவன் தெரிவித்துள்ளார். பாலம் கட்டப்படவிருக்கும் கடல் பகுதி பலத்த புயல் காற்றும் வேகமான கடல் அலைகளும் அடிக்கடி ஏற்படும் பகுதியாகும் எனவே பாலம் கட்டுவதில் உள்ள தொழில் நுட்ப வேலைகள் மிகவும் நுணுக்கமாக பரிசோதிக்கப் படுகின்றன. பாலத்திற்கு அடியில் கப்பல் செல்வதற்கு வசதியிருக்கும். பாலம் கட்டி முடிக்கப்பட்டதும் தனுஷ்கோடி வரை நெடுஞ்சாலை வழியாக செல்லமுடியும். இந்தப் பகுதியில் மீன்பிடித்தொழிலும் வளர்ச்சி பெற வழி பிறக்கும் என மேலும் தெரிவித்துள்ளார் திரு. மகாதேவன்.

## சென்னையில் இலங்கைத் தமிழர் தினம்

சென்னையில் இலங்கைத் தமிழர் தினம் ஒன்று இம்மாதம் அனுட்டிக்கப்பட்டது. இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக நடைபெற்று வரும் அநீதிகளை எடுத்து விளக்கும் வகையில் இத்தினம் இருந்தது. இலங்கைத் தமிழர் வரலாறு பற்றிய கண்காட்சி ஈழத் தமிழர் தலைவர் தந்தை செல்வா படத்திறப்பு அரசியல் மாநாடு ஆகிய நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. உலகத் தமிழ் இளைஞர் பேரவையினரின் ஆதரவில் இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

## ரு 2500 செலவில் மலிவு வீடுகள்

தமிழகத்தின் கிராமப் புறங்களில் ரு 2500 செலவில் மலிவு வீடுகள் கட்ட தமிழக அரசு திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்தின்படி ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ரு 1 கோடி செலவு செய்யப்படும். தொழிலாளர்கள் — நடுத்தர வகுப்பினர் நிரந்தர வருமானம் உள்ளவர்கள் ஆகியோர்க்கு மலிவு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும். இந்த வீடுகளில் ஒரு படுக்கை அறை, ஒரு வரவேற்பு அறை, சமையல் அறை, குளிக்கும் அறை புறக்கடை வசதிகள் ஆகியவை இருக்கும். மாதவரம் ஊராட்சி ஒன்றியத்தில் கட்டப்பட்டு வரும் மலிவு வீடுகளைப் பார்வையிட வந்த அமைச்சர் ராசாராம் அவர்களுக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு விழாவின் போது அமைச்சர் மேற்படித் தகவலைத் தெரிவித்தார்.

## இலங்கையில் சட்ட மறுப்பு இயக்கம்.

இலங்கையில் தமிழர்களின் சட்ட மறுப்பு இயக்கம் இம்மாதம் ஆரம்பிக்கப்படும். ஆகஸ்டு 18,19ந்தேதிகளில் வவுனியாவில் கூடும் தமிழர் கூட்டணியின் நடவடிக்கைக்குழு திட்டக்குழுவின் சட்ட மறுப்பு திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்ததும் இயக்கம் உடனடியாகத் தொடங்கப்படும் எனத் தெரிய வருகின்றது.

## தமிழ் நாட்டில் பெண் போலீஸ் படை



தமிழ் நாட்டில் முதன் முறையாக பெண் போலீஸ் படை ஒன்று நிறுவப்படவிருக்கிறது. இதன்படி ஒரு சப்—இன்ஸ்பெக்டர், ஒரு தலைமைக் காவலர், 20காவலர் கொண்ட மகளிர் காவற் பிரிவு (பெண் போலீஸ் செக்ஷன்) அமைக்கப்படும்.

மேற்படி தகவலை வெளியிட்ட முதல்வர் கருணாநிதியிடம் — "இந்தப் பெண் போலீஸ்காரர்கள் எங்கு வேலை செய்வார்கள்? என்னென்ன வேலை செய்வார்கள்?" என்று பத்திரிகை நிருபர்கள் கேட்ட போது "இவர்களை "கான்ஸ்டபிளிகள்" என்று சொன்னாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை" என்றும் "இடம் பொருள் ஏவல் ஆகியவற்றில் பொருளைப்பற்றிச் சொல்லிவிட்டேன். இடத்தையும் ஏவலையும் பிறகு சொல்கிறேன்" என்றும் முதலமைச்சர் கருணாநிதி சொன்னார்.

## காங்கேசன் துறை உப—தேர்தல் எங்கே?

ஜனநாயக நாடுகளின் வரலாற்றில் இலங்கை ஒரு புதிய விதிமுறையை வகுத்துள்ளது. கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் நமது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து பதவி விலகல் செய்தார் தமிழரசுத்தந்தை செல்வநாயகம். ஏப்ரல் மாதம் காலமான முன்னாள் பிரதமர் டட்லி சேனநாயக்காவின் தேர்தல் தொகுதியான டெடிகமையில் சென்ற மாதம் உப—தேர்தல் நடத்தப்பட்டது. ஆனால் காங்கேசன்துறையில் இன்னும் உப—தேர்தல் நடத்தப்படவில்லை!! சிங்களத் தொகுதியான டெடிகமையில் தேர்தலின் போதும் அதற்குப் பின்னரும் பலாத்காரம், வன்முறை, கலவரம் தலைவிரித்தாடியது. காங்கேசன்துறையில் தேர்தல் நடைபெறுதற்கு அரசு கூறும் சமாதானம் காங்கேசன்துறைத் தொகுதியில் வன்முறை நடைபெற்று வருகிறது என்பதே!! அமைதி நிறைந்த காங்கேசன்துறைத் தேர்தல் தொகுதியில் தேர்தலை நடத்தாது காலவரையின்றி ஒத்திப்போட்டு ஜனநாயக வரலாற்றிலேயே ஒரு புதிய விதிமுறையை வகுத்துவிட்டது இலங்கை அரசு

## சிதறிய செய்திகள்

* * * தமிழ் நாட்டில் தற்போது பவுன் விலை ரூபாய் 268.. கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு விலை ரூபாய் 100 உயர்ந்துள்ளது.

* * * அகில இந்திய சமூக நல போர்டின் தலைவராக முன்னாள் முதல் மந்திரி பக்தவத்சலத்தின் புதல்வி சரோஜினி வரதப்பன் நியமிக்கப்பட்டுள்ளார்.

* * * இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 12வது மாநில மாநாடு செப்டம்பர் 7,8,9, தேதிகளில் காங்கேசன்துறையில் நடைபெறுகின்றது.

* * * தென்னாபிரிக்கப் பல்கலைக் கழகம் முதன் முறையாக இந்தியர் ஒருவருக்கு டாக்டர் பட்டம் அளித்துள்ளது. டாக்டர் பட்டம் பெற்ற தமிழரான திரு. எம்.பி.நாயுடு பூகோள படிப்பில் பட்டம் பெற்றுள்ளார்.

* * * இந்தியாவின் முதல் கூட்டுப்பண்ணை கேரளாவில் எர்ணாகுளம் அருகேயுள்ள இலவித்தோடு கிராமத்தினில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

* * * சென்னை மாநகரில் இதுவரை 50 நடைபாதை மன்றங்கள் அகற்றப்பட்டன என தெரிவித்துள்ளார் போலீஸ் கமிஷனர் வைகுறு.

* * * ஆப்கானிஸ்தானத்துக்கு இந்திய நாட்டின் அன்பளிப்பாக யானைக்குட்டி ஒன்று விமான மூலம் அனுப்பப்பட்டுள்ளது. யானைக்குட்டியின் பெயர் மனுமதி.

* * * ராஜாஜி எழுதிய திக்கற்ற பார்வதி என்ற சிறுகதை படமாக்கப்படுகின்றது. படத்திற்கு எழுத்தாளர் துரன், எஸ்.வி.எஸ்.ஆகியோர் திரைக்கதை எழுத காரைக்குடி நாராயணன் வசனம் எழுதுகிறார்.

* * * இலங்கை அமைச்சர் இலங்கரத்ன யாழ் மாநிலத்திற்கு சென்றிருந்த போது அவர் போகும் வழிகளில் ஆயுதம் தாங்கிய போலீசார் காவல் புரிந்து நின்றனர். ஆனால் உரும்பிராய் சந்தியில் வந்து நின்ற ஏராளமான கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு அஞ்சி பாதையை மாற்றி ஓட வேண்டிய பரிதாபமான நிலைக்கு ஆளானார் அமைச்சர்.

* * * பர்மா இலங்கை நாடுகளிலிருந்து தமிழகம் வந்துள்ள அகதிகளுக்காக சேலம் மாவட்டத்திலுள்ள நாமக்கல் பகுதியில் 20 ரூபாய் செலவில் காபி பயிர் செய்யப்படுகின்றது.

* * * பண நெருக்கடியால் உணவு வழங்கமுடியாத நிலை ஏற்படவே தனது மூன்று குழந்தைகளையும் அரிவாளால் வெட்டிக் கொலை செய்தார் இலங்கை இரத்தினபுரி மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு கிராமவாசி.

* * * தொழிலதிபர் பொள்ளாச்சி மகாலிங்கத்தின் 50வது வயது பிறந்த நாளன்று அவருக்கு மத்திய அமைச்சர் ஜகஜீவன்ராம் பொன்னாடை போர்த்தினார்.

* * * 151 இளநீர்த் தேங்காய்களைத் தனது தலையில் அடித்து உடைத்துக் காட்டினார் இலங்கையிலுள்ள கதிர்காம மலையிலிருந்து சென்னை வந்துள்ள திருநாவுக்கரசு சுவாமிகள்.

* * * காரைக்காலைச் சேர்ந்த திருநள்ளாற்றில் நடைபெற்ற சனிப்பெயர்ச்சி விழாவில் நான்கு லட்சத்திற்கு மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டனராம்.

* * * கணித மேதை இராமானுஜனின் நினைவு மலர் ஒன்றினை டிசம்பர் மாதத்தில் வெளியிட இராமானுஜன் நினைவுக்குழு திட்டமிட்டுள்ளது.

* * * இலங்கையின் பிரதமர் டீமாவோ கனடாவில் நடைபெற்ற பொதுநலவமைப்பு மாநாட்டுக்குச் சென்ற போது மைத்திரிப்பால சேனநாயக்கா தாற்காலிகப் பிரதமராக நியமிக்கப்பட்டார்.

* * * இந்தியாவின் உணவு நெருக்கடியைச் சமாளிக்கவெளிநாடுகளிலிருந்து 45 லட்சம் டன் கோதுமையை இறக்குமதி செய்ய முடிவு செய்துள்ளது மத்திய அரசு.

* * * புதுக்கோட்டையைத் தனி மாவட்டமாக ஆக்குவது பற்றிய விசேட அறிக்கை வெளி வந்துள்ளது. தமிழக அரசு இந்த அறிக்கையை ஆராய்ந்து வருகிறது.

* * * யாழ்ப்பாண மாநிலத்திற்கு வருகை தந்த இலங்கை அமைச்சர் இலங்கரத்ன நீண்ட காலமாக பிளவு பட்டிருந்த தமிழர்—சிங்களவர் உறவு மீண்டும் ஒன்றுக்கப்பட வேண்டும் என வேண்டுகோள் விடுத்தாராம்.

* * * தமிழ் ஈழத்தில் தமிழ் சோஷலிச கூட்டணி உருவாக வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார் அமைச்சர் இலங்கபத்து. தமிழர் கூட்டணிக்கு எதிராக ஒரு புதிய கூட்டணி உருவானால் ஈழத்தமிழரின் கதி என்ன?

* * * நடிகர் திலகம் சிவாஜி கணேசனும் வாணிஸ்ரீயும் வசந்த மாளிகை திரைப்பட வெள்ளி விழா வைபவத்தில் கலந்து கொள்ள இலங்கை சென்றுள்ளனர்.

* * * தமிழகத்தில் கள்ளுக்கடைகளை மூடுவது பற்றி அரசு எடுத்துள்ள முடிவை ஆட்சேபித்துத் தொடரப்பட்ட வழக்கை சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

* * * பாண்டிச்சேரிக்கு மாநில அந்தஸ்து வேண்டும் என மத்திய அரசிடம் வலியுறுத்தவிருப்பதாக பாண்டிச்சேரி முதலமைச்சர் பாருக் மரைக்காயர் தெரிவித்துள்ளார்.

* * * டைட்டேனிய உலோக தாதுவான இல்மினைட்டை வளப்படுத்த தொழிற்சாலையொன்றினை அமைக்க இலங்கைக் கனிப்பொருள் கூட்டுத்தாபனம் திட்டமிட்டு வருகின்றது.

# நம்மைச் சுற்றிய உலகம்

* * இங்கிலாந்தில் கார்லேலுக்கருகில் கிரேட் கார்பை என்னுமிடத்தில் திரு.ஜா.ஃப்ரி ஜட்ஜ் என்பவருடைய தேனீப் பண்ணையில் ஐந்து லட்சம் தேனீக்கள், மற்றும் தேன், தேனடை ஆகிய யாவும் இரவு நேரத்தில் அண்மையில் களவு போயின.

* * விஞ்ஞான ஆராய்ச்சிகளை விண்வெளியில் நடத்தி வரும் ஸ்கைலாப்பில் பயணம் செய்பவர்கள் கடற்படைத் தளபதி ஆலன் பீன், டாக்டர் ஓவன் காரியோட், கடற்படை மேஜர் ஜாக் லூசா. இவர்களுடன் அரெபெல்லா, அனிதா என்று பெயரிடப்பட்டுள்ள இரு சிலந்திப் பூச்சிகளும் பயணம் செய்கின்றன. கலிபோர்னிய பாலைவனங்களில் வசிக்கும் ஆறு கட்டை விரல் அளவுள்ள மூஞ்சூறுகளும், அமெரிக்க கிழக்குக் கடற்கரைப்பகுதியில் வசிக்கும் மின்ரேவ் எனும் மீனும், வினிகார் கொசுக்களும் ஸ்கைலாப்பில் உல்லாசப்பயணம் போயிருக்கின்றன.

* * 17ம் நூற்றாண்டில் செய்யப்பட்ட ஒரு துப்பாக்கியின் விலை இன்று 130,000 பவுன்கள். ஸ்காட்லாந்து நாட்டு கலைத்திறனைப் பிரதிபலிக்கும் இந்த துப்பாக்கியினை ஸ்காட்லாந்து தேசிய கலைப்பொருள்கள் கண்காட்சிக்காக வாங்க அரசு 80,000 பவுன்களை தரும். 1624ல் ஜேம்ஸ் லோ கம்பெனியாரால் டண்டியில் செய்யப்பட்டுள்ள இந்தத் துப்பாக்கியைப் போல மொத்தம் இரண்டுதான் இருக்கின்றனவாம்.

* * வெனிஸ் நகரில் புனித மார்க் சதுக்கத்தில் புறாக்களின் எண்ணிக்கை ஏராளமாகப் பெருகி விட்டதால் சுகாதாரக்கேடு விளையும் என்று சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. புறாக்களின் எண்ணிக்கையினைக் கட்டுப்படுத்த பறவைத்தீனிகள் அங்கேயே விற்கப்படமாட்டா. நகரின் மற்ற பகுதியில் விற்கப்படும் பறவைத்தீவனங்களான தானியங்கள் கருத்தடை மருந்து கொண்டவையாயிருக்கும்.

* * பாரிசு நகரை அழகுறச்செய்யும் ஸீன் நதியில் வாழும் மீன்கள் இவ்வாண்டின் வெயில் கொடுமை தாளாமல் உயிரை விட்டு விட்டனவாம். ஆயிரக்கணக்கில் மிதந்த செத்த மீன்களின் இந்த செயலுக்குக்காரணம் தண்ணீரில் உயிரியம் (ஆக்ஸிஜன்) குறைவும் வெயிலும் தான் . உயிரியம் குறையக் காரணம் தண்ணீரில் நச்சுப் பொருட்களைக் கொட்டுவது தான்.

* * அயர்லாந்தில் பாலிகம்பர் என்னுமிடத்தில் ஒரு புதுமையான விளையாட்டு தொடங்கப்படவிருக்கிறதாம். உயிரோடு தவளையை விழுங்க வேண்டும். வெற்றி பெற்ற வீரர் மனிதனின் தீவு (ஐல் ஆஃப் மேன்) க்கு இலவசமாக பயணம் செய்யலாம். அதோடு 5 பவுன் பணமும் பெறுவார்.

* * ஃப்ளோரிடா மாநிலத்தில் ஒரு ஊரில் சுவற்றில் ஊர்ந்த இரு கரப்பான் பூச்சிகளை துப்பாக்கியால் சுட்டுக் கொல்ல முயன்ற இரு போலீஸ் அதிகாரிகள் தங்கள் வேலையை இழந்தனர். துப்பாக்கிக்குண்டுகள் மரச்சுவர் ஒன்றைத் துளைத்து அடுத்த அறையில் இருந்த பீர் குளிர் சாதனத்தை கெடுத்தது. வேறு சில சிறு இழப்புக்களும் நேர்ந்தன. அந்த அதிகாரிகள் பதவியை விட்டு விலகும்படி கேட்டுக்கொள்ளப்படவே அவர்கள் வெளியேறினர். அது சரி, அந்த பூச்சி என்னவாயிற்று! யார் கண்டார்கள்!!

* * மனிதனின் தீவு (ஐல் ஆஃப் மேன்) கண்ட பயங்கர தீ விபத்துக்கு முன்பே உலகம் பலமுறை பெரும் தீ விபத்துக்களைக் கண்டிருக்கிறது. இவற்றுள் மிகவும் கொடூரமானது 1845ல் சைனாவில் கேன்டன் நகரில் கலையரங்கு ஒன்று எரிந்த போது ஏற்பட்டது. இவ்விபத்தில் 1670 மக்கள் இறந்தனர்.

* * நியூயார்க்கில் 14 கட்டிடங்கள் தள்ளி இருந்த ஒரு விலாசத்திற்கு ஒருவர் அனுப்பிய கடிதம் ஒரு வாரத்திற்குப் பிறகு போய்ச் சேர்ந்ததாம். இதைக் குறிப்பிடும் 'ராபர்ட் யோகும்' என்பவர் ஒப்பு நோக்கும் பொருட்டு ஒரு நத்தையின் வேகத்தையும் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். தோட்டத்து நத்தை தன் உயர் மட்ட வேகத்தில் மணிக்கு 165 அடிகள் நகருமாம்.

* * வலியின்றி உயிர் போகும் வண்ணம் பல்லைப் பிடுங்கும் பல் வைத்தியர்களை இனி காணமுடியாது போகலாம். பல் பிடுங்கும் போது தரப்படும் மயக்க வாயு வான நைட்ரஸ் ஆக்ஸைடு 50 சதவீதம் உயிரியத்துடன் முகரப்படுவதற்கு பதில் 15 சதவீதம் நைட்ரஸ் ஆக்ஸைடும் மீதி உயிரியமும் கொண்ட கலவை முகரப்பட்டால் மயக்கம் வருவதற்கு பதில் வலி தெரியாத போதை நிலை ஏற்படும். "ரிலடிவ் அனல்ஜீசியா" எனப்படும் இம்முறை மேலை நாடுகளில் வேகமாகப் பரவி வருகிறது.

* * அயர்லாந்தில் உள்ள கார்க் என்னுமிடத்தில் உலகின் முதல் பன்றிப் பந்தயம் நடத்தப்படவிருக்கிறது.. பந்தயத்தில் பங்கேற்கப் போகும் பன்றிகள் பந்தய தினத்துக்கு முதல் நாள் பட்டினி போடப்படும். பந்தய நாளன்று முடிவு நிலையில் பன்றிகளின் சொந்தக்காரர்கள் கையில் உணவினை ஏந்தி தத்தம் பன்றிகளைக் கவர்ந்து வெற்றி பெறத் தூண்டுவார்கள். ஓட்டப்பந்தயத்தைத் தவிர "ஐரிஷ் பிக் கிராண்ட் இன்டர்நேஷனல்" என்னும் பந்தயமும் நடத்தப்படும். இதில் பங்கேற்கும் பன்றிகள் 100 கஜ தூரத்தை கடக்கும் போது ஐந்து தடைகளைத் தாவிச் செல்ல வேண்டும்.

## இக்கரைச் சீமையில் எம்.ஜி.ஆர்



பாரிசிற்கு வந்து பாரிசு தமிழ்ச்சங்கத்தின் வரவேற்புக் கூட்டத்தில் கலந்து கொண்ட எம்.ஜி.ஆர் அச்சங்கத்தின் தலைவரின் வேண்டுதலுக்கிணங்க ஓர் தட்டெழுத்து இயந்திரம் அன்பளிப்பாகத் தருவதற்கிணங்கியுள்ளார். மேலும் அவர் சில தமிழ்ப் பத்திரிகைகளையும் பாரிசு தமிழ்ச் சங்கத்திற்கு அண்ணா தி.மு.கழகத்தின் நிதியிலிருந்து சந்தா கட்டி அனுப்புவதாக உவகையுடன் தெரிவித்தார். பாரிசு தமிழ்ச் சங்கத்தின் தமிழோசை ஆசிரியர் திரு.இளங்கோவன் அவர்கள் எம்.ஜி.ஆர் குழுவினருடன் "வேர்செய்ல்ஸ்" சென்று மாளிகையை விளக்கி சுற்றிக்காட்டினர்.

* * அதிபர் நிக்ஸனை நீதி மன்றத்துக்கு இழுத்து விட்ட வாட்டர் கேட்டின் அடிப்படையான மின்னணுமூட்டைப் பூச்சி எனும் ஒட்டுக் கேட்கும் கருவியில் புத்தம் புதிய கருவி வந்திருக்கிறது. மின்னணுக்கருவிகள்உள்ள ஒரு காரினை கால் மைல் தொலைவில் நிறுத்தினாலும் தொலைபேசி நுண்ணலை அஞ்சல் கோபுரத்திலிருந்து (டெலிபோன் மைக்ரோவேவ் ரிலே டவர்) அஞ்சலாகும் சுமார் 400க்கும் மேற்பட்ட உரையாடல்களை ஒரே நேரத்தில் ஒட்டுக் கேட்கலாம்.

—தொகுப்பு: திருமலைப்பெருமான்

## திரைக்கு வந்தவை

### ஜூன் மாத வெளியீடு

| | |
|---|---|
| படம் | : இறைவன் இருக்கின்றான் |
| தயாரிப்பு | : மகா கணபதி பிக்சர்ஸ் |
| நடிப்பு | : ஜெய் சங்கர், ஜெயா, சுந்தரராஜன் சுருளிராஜன், மனோரமா, தேங்காய் சீனிவாசன். |
| இசை | : சங்கர்—கணேஷ் |
| பாடல்கள் | : வாலி, புலமைப்பித்தன் |
| கதை வசனம் | : குகநாதன் |
| இயக்குநர் | : வேணு |

@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@

| | |
|---|---|
| படம் | : வீட்டு மாப்பிள்ளை |
| தயாரிப்பு | : சக்தி பிலிம்ஸ் |
| நடிப்பு | : ஏவி. எம். ராஜன், சுந்தரராஜன், பிரமீளா, சாவித்திரி, சந்திரபாபு, தேங்காய் சீனிவாசன், குமாரி சச்சு |
| கதை வசனம் | : பேராசிரியர் ஏ. எஸ். பிரகாசம் |
| இயக்குநர் | : ஏ. கே. சுப்பிரமணியம். |

@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@

| | |
|---|---|
| படம் | : பொன் வண்டு |
| தயாரிப்பு | : மணியம் பிக்சர்ஸ் |
| நடிப்பு | : ஜெய்சங்கர், உஷாநந்தினி, ஜெயசித்ரா, பாரதி, மனோரமா, தேங்காய் சீனிவாசன், வி. கே. ராமசாமி. |
| இசை | : குமார் |
| பாடல்கள் | : வாலி, சோமு. |
| கதை, வசனம் இயக்குநர் | : என். எஸ். மணியம். |


### ஜூலை மாத வெளியீடு

| | |
|---|---|
| படம் | : சொந்தம் |
| தயாரிப்பு | : அமுதம் பிக்சர்ஸ் |
| நடிப்பு | : முத்துராமன், விஜயா, பிரமீளா, சிவகுமார், வி. கே. ராமசாமி. |
| இசை | : எம். எஸ். விஸ்வநாதன் |
| பாடல்கள் | : கண்ணதாசன் |
| கதை வசனம் | : காரைக்குடி நாராயணன் |
| இயக்குநர் | : ஏ. சி. திருலோகச்சந்தர். |

@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@

| | |
|---|---|
| படம் | : எங்கள் தங்க ராஜா |
| தயாரிப்பு | : ஜெகபதி ஆர்ட் பிக்சர்ஸ் |
| நடிப்பு | : சிவாஜி கணேசன் இரட்டை வேடம், மஞ்சுளா, சுந்தரராஜன், மனோகர், சௌகார் ஜானகி. |
| வசனம் | : பால முருகன் |
| பாடல்கள் | : கண்ணதாசன் |
| இசை | : கே. வி. மகாதேவன் |
| இயக்குநர் | : ராஜேந்திர பிரசாத். |

@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@@



## INDIAN NATIONAL TRAVELS LIMITED

**At your Service since 1930**

LOWEST JET FARES to SINGAPORE.

INDIA, CEYLON, MALAYSIA, FAR EAST.

AUSTRALIA, U.S.A. and CANADA.

**Packing Shipping & Forwarding**

**Export Shopping Service**

25 Bloomsbury Way, London, W.C.1

**Telephone: 01-405 1193**



## VIJAY INDIA RESTAURANT

for delicious South Indian Food

AVIAL—ADAI—MASALA DOSAI—MASALA VADAI—UPPUMA
IDDLY—SAMBAR—BRIYANI—PURI—CHAPATHI etc.

OPEN: Monday to Thursday & Sunday 12 to 3 p.m. & 6 to 11 p.m.
Friday & Saturday 12 to 3 p.m. & 6 to 12 p.m.

**49 WILLESDEN LANE, KILBURN, LONDON, N.W.6**

**(Near to Kilburn State Cinema)**

Manager: T. R. DAS





## LAWNFORD LTD.

**LEADERS IN QUALITY FASHION FABRICS**

DIRECT IMPORTERS, EXPORTERS,
WHOLESALERS AND RETAILERS.
LARGE STOCKISTS OF:
JAPANESE PLAIN AND PRINTED NYLON GEORGETTE SAREES
AND LUREX BROCADES.
SPECIALISTS IN ENGLISH CURTAIN MATERIALS
ALL THESE AND MANY MORE VARIETIES AVAILABLE AT MOST
KEENEST PRICES.

**VISIT US AT**
**COMMERCE AND INDUSTRY HOUSE**
**31 MIDDLESEX STREET**
**ALDGATE, LONDON, E1 7AA**
**Tel.: 01-247 7129 Cables: YAULEE, LONDON, S.W.19**
**SITUATED IN THE WORLD FAMOUS PETTICOAT LANE MARKET AREA**
**UNDERGROUND STATIONS:**
**ALDGATE, ALDGATE EAST, LIVERPOOL STREET**
**WAREHOUSE AT 171 ARTHUR ROAD, WIMBLEDON PARK, LONDON, S.W.19**
**Tel.: 01-946 6914**



TEL: 01 684 8437 TEL: 01 654 5446

# MOHAMEDS

**ORIENTAL GROCERS**

| | |
|---|---|
| 267 LONDON ROAD | 61 PORTLAND ROAD |
| WEST CROYDON | SOUTH NORWOOD |
| SURREY | LONDON, S.E.25 |

# மேற்கு நாடுகளின் செய்திகள்

## நியூயார்க் சைவக்கோவில் திருப்பணி ஆரம்பம்

நியூயார்க் சைவக் கோவிலுக்கான திருப்பணி ஆகஸ்ட் 20ந் தேதியன்று ஹைதராபாத்தில் தொடங்குகின்றது. ஆரம்ப விழாவிற்கு திருப்பெருந்திரு. பன்றிமலை சுவாமிகள் தலைமை வகிப்பார். 3000 கருங்கற் பாறைகளால் ( Blocks ) கோவில் கட்டப்பட்டு பின்னர் பிரித்து தனிக் கப்பலில் நியூயார்க்கிற்கு வருகின்றது. நியூயார்க் வந்ததும் கருங்கல் பகுதிகள் மீண்டும் ஒருங்கிணைக்கப்படும் ( Re-assemble ) . கோவில் கட்டப்படும் ஒவ்வொரு பாறைக்கும் நன்கொடைகள் வாங்கும் திட்டம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி கோவில் திருப்பணிக்கு நன்கொடை அளிக்க விரும்புவோர் ஒவ்வொரு பகுதிக்கும் $300, $200, $100 என நன்கொடைகள் அனுப்பலாம். நன்கொடை செய்வோரின் பெயர்கள் பளிங்குக் கற்களில் பொறிக்கப்படும். கோவிலை வெற்றிகரமாகக் கட்டிமுடிப்பதற்கு தமிழர்கள் அனைவரது உதவியையும் எதிர்பார்த்துள்ளது வட அமெரிக்க டெம்பிள் சொசைட்டி. நன்கொடைகள் அளிக்க விரும்புவோர் கீழ்க் காணும் முகவரியில் செயலாளர் அவர்களுடன் தொடர்பு கொள்ளலாம்: டாக்டர் அழகப்பன், Secretary, The Hindu Temple Society of North America, 84-39 Kendrick Place, Jamaica Estates, New York, N.Y.11432.

## லண்டனில் மக்கள் திலகத்திற்கோர் மாபெரும் வரவேற்பு விழா.

இன்று 30.7.73 மகாத்மா காந்தி மண்டபத்தில் மக்கள் திலகம் எம்.ஜி.ஆருக்கு ஒரு மாபெரும் வரவேற்பு விழா என்று நண்பன் ஒருவன் கூறக்கேட்ட நான் வேலையிலிருந்து விழுந்தடித்துக்கொண்டு இந்தியன் ஒய்.எம்.சி.ஏ சென்றேன். அங்கு நான் கண்ட காட்சி. அப்பப்பா.. கூட்டம் அலை மோதியது. லண்டன் தமிழர்களின் வரலாற்றிலேயே இது வரை இப்படிப்பட்ட கூட்டம் கூடியதில்லை. அனைவரும் ஆவலுடன் காத்திருக்க சிறிது நேரத்திலேயே மக்கள் திலகம்,லதா,ப.நீலகண்டன்,சித்ரா கிருஷ்ணசாமி ஆகியோர் வந்து சேர்ந்தனர். விழாவை ஏற்பாடு செய்த தமிழ் திரைப்பட சமூகக் கழகத்தினரின் அறிவிப்பாளர் திரு.ஜெயம் குமாரநாயகம் அனைவருக்கும் வரவேற்பு கூறி ஒவ்வொருவராக மேடைக்கழைத்தார். கழகத்தின் செயலாளர் திரு. லத்தீப் ஷா அவர்களின் வரவேற்பு உரையின் பின் திரு.சித்ரா கிருஷ்ணசாமியும் திரு.ப.நீலகண்டனும் சிறு சொற்பொழிவாற்றினர். உலகம் சுற்றும் வாலிபன் படத்தை மாஸ்கோவில் திரையிட வந்தவர்கள் அப்படியே லண்டன் வந்ததாகவும் கூறி மாஸ்கோவில் தமிழ் மக்கள் தங்களிடம் காட்டிய அன்பையும் வரவேற்பையும் அங்கு நடந்த சில சுவையான சம்பவங்களையும் இவர்கள் விவரித்தனர். லதா தானும் அ.தி.மு.க.வில் ஒரு அங்கத்தினர் என்று பெருமையாக கூறியதோடு தனது ஒரு நிமிட உரையை அழகாக முடித்து விட்டார்.

மக்கள் திலகத்தைப் பேச அழைத்தனர்.கையொலி வானைப் பிளந்தது. சாதாரண தொனியில் தன் பேச்சை ஆரம்பித்த மக்கள் திலகம் இடி முழக்கத்துடன் அதை முடித்தார். அவரது பேச்சில் இருந்த ஆழமும் கருத்துச் செறிவும் அங்கிருந்தோர் அனைவரையும் மெய் மறக்கச் செய்துவிட்டது. மக்கள் தன்னைப் போன்றவர்களுக்குக் காட்டும் இந்த அன்பும் ஆதரவும் எத்தனை காலத்திற்கு நிலைக்கும். உயிர் உடலை விட்டுப் போனபின்னும் மக்களின் உள்ளங்களில் இடம் பிடித்தவர் எத்தனை பேர். கலைவாணரின் கதி என்னவாயிற்று. என்று அழகாகக் கூறிய எம்.ஜி.ஆர் இன்று மக்களின் உள்ளங்களில் இடம் பிடித்திருப்பதைப் போல என்றும் இருக்கவேண்டும் என்பதுதான் தனக்குள்ள பேராசை என்று கூறிய போது எழுந்த கையொலி நீங்கள் அதைக் கூறியிருக்கவே வேண்டாம் என்று அவரிடம் கூறுவது போல இருந்தது.

நீண்ட நேரம் பேசாமல் சுருக்கமாகத் தன் பேச்சை முடித்த எம்.ஜி.ஆரை ரசிகர்கள் சும்மா விட்டு வைக்கவில்லை. மேடை ஏறிச் சென்று பல கேள்விக்கணைகளைத் தொடுத்தனர். ஈழத்தமிழர் பிரச்சினை பற்றியும்,தமிழ் நாட்டிற்கு லண்டனிலிருந்து பணம் அனுப்புவதிலும் பிரயாண பத்திரம் பாஸ்போர்ட் புதிப்பித்தலிலும் உள்ள தொல்லைகளையும் பற்றிக்கூட கேள்விகள் கேட்கப்பட்டன. அ.தி.மு.க. தேவையா? என்று கூட ஓர் அன்பர் கேட்டார். இன்னொருவர் சில புள்ளி விவரங்களின் மூலம் எம்.ஜி.ஆரை மடக்கி விடப்பார்த்தார். அனைவரின் கேள்விகளுக்கும் சந்தேகங்களுக்கும் அழகான ஆழமான முத்துப் போன்ற பதில்களை எம்.ஜி.ஆர். அளித்தார். மடக்க முயன்றவர்கள் அடங்கிப் போயினர். நேரமோ 10 ஆகி விட்டது. யாருமே அதைப்பற்றிக் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. இதற்கிடையில் அவைத்தலைவர் குறுக்கிட்டு எம்.ஜி.ஆருக்கும் ஓய்வு கொடுத்து அன்பர்களின் ஆவலுக்கும் அணை போட்டார். மேடையில் திரை விழுந்தது. மக்கள் திலகமும் மற்றவர்களும் கீழே இறங்கி வந்து ரசிகர்கள் மத்தியில் அமர்ந்தனர். இதன் பின் சிற்றுண்டிகள் வழங்கப்பட்டன. அறிவிப்பாளர் தன்னால் இயன்ற மட்டும் கத்தியும் யாரும் தத்தம் இடங்களில் அமர்ந்து பின் நடந்த நிகழ்ச்சிகளை ரசிக்க முயலவில்லை. தேனுண்ட வண்டுகள் மறுபடியும் மலரைச் சுற்றி மொய்ப்பது போலவே அனைவரும் எம்.ஜி.ஆரை மொய்த்தனர். அவரோடு சேர்ந்து புகைப்படம் எடுத்துக்கொள்ள, அவரின் கையெழுத்தை வாங்க,அவரோடு ஏதாவது பேச இப்படியாக அவரைச்சுற்றி பலர் துடித்துக் கொண்டு நின்றனர். எம்.ஜி.ஆர். பொறுமையோடு அனைவரையும் திருப்திப்படுத்தினார்

மேடையில் நிகழ்ச்சிகள் நடந்தபடி இருந்தன. "லண்டன் ஸ்டேஜ் கிரியேஷன்சார்"அளித்த ஒரு நவீன பாடல் கச்சேரி இடம் பெற்றது. திரு. செந்திவேலின் பாடல்களுக்கு திரு. இளம்பூரணன் மிருதங்கம் இசைக்க திருவாளர்கள் குருப்,தேவ்ராஜ் ராஜ்புட் ஆகியோர் பக்க இசை அளித்தனர். இதன்பின் திருமதி ராஜ்குமார் அவர்களின் மாணவிகளது மோகினி ஆட்டமும்,செல்வி தேவராணி தம்பிராஜாவின் நடனமும் இனிக்கத்தான் செய்தன.இந்நிகழ்ச்சிகளை ரசனையோடு அனுபவித்தவர்கள் சிலரே எனினும் கலைஞர்கள் தளராது நிகழ்ச்சிகளைத் தொடர்ந்தது குறிப்பிடத்தக்கது இறுதியில் அறிவிப்பாளர் நன்றியுரை கூறி விழாவை முடித்த போது மணி 11க்கு மேலாகி விட்டது. இவைகளையெல்லாம் பார்த்துவிட்டு வரும்போது என் மனதில் ஒரு உண்மை பளிச்சிட்டது.அரசியல்வாதி என்றோ திரைப்பட நடிகன் என்றோ எம்.ஜி.ஆரை யாரும் நினைக்கவில்லை. தங்கள் குடும்பத்தில் ஒருவனாக நினைக்கிறார்கள். அதனால்தான் இத்தனை பாசமும் நேசமும். மக்கள் திலகம் உண்மையிலேயே மக்களுக்குத் திலகம் தான்..

—மகிழ்வேந்தன் (லண்டன்.)

## மக்கள் திலகத்திற்கு கிராய்டனில் ஒரு வரவேற்பு விழா

லண்டனில் மகாத்மா காந்தி மண்டபத்தில் எம். ஜி. ஆருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு விழாவினைத் தொடர்ந்து அடுத்த நாள் லண்டனுக்குத் தெற்கே கிராய்டனில் வரவேற்பு விழாவொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. விழா லண்டன் தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்றது. விழாவிற்கு லண்டன் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் திரு சங்கரலிங்கம் அவர்கள் தலைமை வகித்தார்கள். தனக்கு அளித்த வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் தனக்கும் லண்டன் தமிழ்ச் சங்கத்திற்கும் இடையே உள்ள நீண்ட காலத்தொடர்பை வலியுறுத்திப் பேசினார் எம்.ஜி.ஆர். விழாவிற்கு உலகம் சுற்றும் வாலிபன் புகழ் லதாவும் வருகை தந்திருந்தார். — பாலா.

## டொரோண்டோவில் சின்ன மௌலானாவின் நாதஸ்வரக் கச்சேரி — பாரதி கலா மன்றம் ஏற்பாடு

எதிர்வரும் செப்டம்பர் 15ந் தேதி சனிக் கிழமையன்று டொரோண்டோவில் நாதஸ்வர இசைக்கச்சேரி ஒன்றினை ஏற்பாடு செய்துள்ளது பாரதி கலா மன்றம் — டொரோண்டோ. தென்னகத்தின் புகழ்பெற்ற நாதஸ்வரக் கலைஞர் ஷேய்க் சின்ன மௌலானா குழுவின் இந்த இசைக் கச்சேரி கலாமன்றத்தின் 4வது ஆண்டு விழாவையொட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## நவநாகரிகத் தலைநகரில் நற்றமிழ்க் கலைஞர்கள்

அண்மைக் காலத்தில் பலமுறை அந்தோனி மாணவர் விடுதி பிரஞ்சு நாட்டின் தமிழ்க் குடிகளின் தலைமையகமோ என வியக்குமளவிற்கு விளங்கி வருகின்றது. பாரிசு தமிழ்ச் சங்கத்தின் செயலகம் இங்கு இருப்பது தான் காரணம் என்பதை நீங்கள் நான் கூறு முன்னரே ஊகித்திருப்பீர்கள்.

5.8.73 அன்று கிடைத்த தொலைபேசி செய்தி என்னை மீண்டும் அங்கே செல்லத்தூண்டியது. சோசலிச ருஷ்யாவில் நடைபெற்ற திரைப்பட விழாவிற்கு தமிழகத்தின் வண்ணங்களைச் சுமந்துச் சென்ற திரு. எம்.ஜி.இராமச்சந்திரன், திரு. ப. நீலகண்டன் திரு. சித்ரா கிருஷ்ணசாமி, செல்வி லதா ஆகியோருக்கு வரவேற்பு சிறப்புக் கூட்டம் ஒன்று அன்றைய தினம் அந்தோனியில் நடைபெற்றது.

விழாவிற்குத் தலைமை தாங்கிய திரு. முடியப்பநாதன் பாரிசு தமிழ்ச் சங்கம் என்ற பூக்கடைக்கு விளம்பரம் செய்ய முயன்றது வேடிக்கையாக இருந்தது. அடுத்து தமிழ் சங்கத்தின் செயலாளர் திரு. தசரதன் அவர்கள் வந்தோரை மரபு மாறாமல் வருக, வருக என வரவேற்புரை கூறி வரவேற்றார். அடுத்து வந்திருந்த தமிழகத்துத் தூதுவர்கள், உரையாற்றினர்.

திரு. சித்ரா கிருஷ்ணசாமி அவர்கள், தமிழகத்தை விடுத்து வாழ்பவர்களுக்கு அழகிய தமிழில் இலைமறைவு காய் மறைவாக பண்பாட்டை நினைவூட்டினார். தமிழ்த்திரையோவியங்களின் வசன கர்த்தா அல்லவா அவர். தொடர்ந்து பேசிய திரு. ப. நீலகண்டன் எம்.ஜி.இராமச்சந்திரன் என்ற புகழுக்கு விளக்கம் கொடுக்க முயன்று வெற்றி காணவில்லை. அது அவர் தவறில்லை. கொல்லன் வீதியில் ஊசி விற்குமளவுக்கு அவர் முயன்றிருக்க வேண்டாம் என எண்ணத் தோன்றியது.

அடுத்து எம்.ஜி.இராமச்சந்திரன் அவர்கள் பேச எழுந்தார். எனது முழுக்கவனத்தையும் அந்த உரையில் செலுத்த ஆரம்பித்தேன். நல்ல தமிழில் அழகுற தான் புதிதாகத் துவக்கியுள்ள கட்சியினைப்பற்றி அவருடைய உரை திசை மாறிச் சென்றாலும், தமிழகத்தின் இன்றைய உண்மை நிலையை உணர்ந்தவர் என்பதை ஆங்காங்கே காண முடிந்தது. திண்டுக்கல் வெற்றிப் பெருமிதம் மிதமாக அவ்வுரையில் இழைந்தோடினாலும் இன்றைய தமிழகத்தின் தலை விதியினை தன் கையில் வைத்துக் கொண்டிருக்கும் தலைவர் ஒருவரின் பேச்சைக் கேட்கின்றோம் என்ற உணர்வு மேலிட்டது.

தமிழகத்தில் நிலவி வரும் அநீதிகளை எடுத்துக்கூறிய திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் தான் அதற்குச் செய்யவிருக்கும் அல்லது திட்டமிட்டுள்ள மாற்றங்களைப்பற்றிக் கூறுவார் எனக் காத்திருந்த எனக்கு ஏமாற்றம்தான் மிஞ்சியது. தொடர்ந்து தன் குழுவினரை பாரிசிற்கு அழைத்த பாரிசு தமிழ்ச் சங்கத்திற்கு நன்றி கூறிய அண்ணா தி.மு. கழகத்தின் தலைவர் உண்மையுணர்வுடன் அச்சங்கத்திற்கு நல்லாசிகள் நல்கினார். பாரிசு தமிழ்ச் சங்கம் விழுதுகள் பல விட்டு பெருநிழல் தரும் ஆலமரமாகத் தழைத்தோங்க ஆசி கூறி அவர் முடித்த போது நீண்ட நாட்களுக்குப்பின் நல்லதோர் தமிழ்ச் சொற்பொழிவைக் கேட்ட நிறைவால் மட்டுமல்ல அவரது நல்ல உள்ளத்தினாலும் மானசீகமாக வாழ்த்து கூறினேன்.

அடுத்து பாரிசு தமிழ்ச் சங்கத்தின் தலைவர் திரு. நசீர் அவர்கள் விழா நடைபெற பின்னணியாக விருந்த நிகழ்ச்சிகளை அவையோருக்கு விளக்கிக்கூறினார். தமிழகத்திலிருந்து மட்டுமல்ல, இந்தியாவிலிருந்தும், மக்கள் சமுகத்திற்கு தொண்டு செய்யும் எவருக்குமே பாரிசு தமிழ்ச் சங்கம் தலை வணங்கி வரவேற்கும் என அவர் கூறிய போது திரு. எம். ஜி. ஆர். உட்பட அந்த அரங்கமே பெருமகிழ்வுடன் அதனை வரவேற்றது.

பின்னர் அவையோரின் சில கேள்விகளுக்கு, திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் பதிலளித்தார். தி.மு.கழகம் என்ற பாடசாலையில் திரு. சி. என். அண்ணாத்துரை என்ற பேராசிரியரின் மாணாக்கர் அல்லவா அவர். கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்காமல் அழகுறக் கேட்டவர் மீதே அவற்றை வீசியதில் வியப்பொன்றுமில்லை. பாரிசு தமிழ்ச் சங்கத்தின் தலைவரின் நன்றியுரையுடன் விழா முடிவுற்றது.

இந்த நிகழ்ச்சியினைப் பற்றி எழுதும்போது ஒரு வேதனையான உண்மையைக்கூறாமல் இருக்க முடியாது. மக்களிடையே தனக்கிருக்கும் செல்வாக்கைப் பயன்படுத்திக் கொள்ளும் தலைவர்கள் தங்கள் கொள்கைகளை விளக்கிக்கூற முன்வராதது மட்டுமல்ல, சிறிது அவற்றை வற்புறுத்திக் கேட்பவர்களை தமது அரசியல் எதிரிகள் என எடுத்தெறிந்து பேசிவிடுகின்றனர். இதற்கு இவரும் விதிவிலக்கல்ல என எண்ணத் தோன்றுகிறது. மற்றுமோர் சந்தேகம் . அகப்பையில் வருவதற்கு சட்டியில் என்ன இருக்கப் போகின்றது என்றும் கேட்கத் தோன்றுகிறது.

—வைதேகிமணாளன் (பாரிசு)

# உள்ளிப் பூண்டு விவகாரம்

– அநுராதா –
(லண்டன்)

ஆளும் கட்சியில் சேர்ந்தால் உள்ளிப் பூண்டு முதல் தட்டுப்பாடான பொருட்கள் அனைத்தும் தருவோம் —

இது செய்தி.. இதனைக் கேள்வியுற்ற அநுராதாவின் உள்ளத்தில் தோன்றிய எண்ணக்கோவை — உள்ளி விவகாரம். இது கற்பனை.



000000000000000000000000000000000000000000000

ஆளும் கட்சிப் பிரமுகர் ஒருவரின் கற்பனையில் நிகழ்ந்த ஒரு உரையாடல்:

பிர: ஐய்யய்ய..இதென்னம்மா..அம்மியும் குழவியும் தூக்கிக்கிட்டு இந்த ஓட்டுச் சாவடிக்கு வந்திட்டியே..என்ன இது.

பெண்: ஒண்ணுமில்லீங்க ஐயா..ஓட்டு போட்டுப்பிட்டு நீங்க தர்ரதாகச் சொன்ன உள்ளிப்பூண்டை வாங்கி இங்கேயே ஒரு துவையலை நல்லா அரைச்சு சாப்பிட்டுப் போடுவெம்னுதானுங்க இப்படி அம்மியோடு வந்திருக்கேன்.....


பிர: .............

000000000000000000000000000000000000000000000

ஆசிரியர் மாணவனைக் கேட்கிறார்..

ஆசிரி: ஏய் ..ராசு..வயல் வரப்பிலே களைகள்,புல் பூண்டுகள் முளைத்திருந்தால் என்ன செய்ய வேண்டும்..

ராசு: புல் முளைத்தால் பிடுங்கி எறிய வேண்டும்..பூண்டு இருந்தால் நம் ஆளுங்கட்சியின் தேர்தல் நிதிக்கு அளிக்க வேண்டும் சார்...



000000000000000000000000000000000000000000000

பிரமுகர் தன் ஏஜன்டிடம்:

பிர: என்னப்பா..நாம் எவ்வளவோ கஷ்டப்பட்டு செலவு செஞ்சு உள்ளியை அள்ளி வீசினோம்..அப்படியிருந்தும் விசுவாசமில்லாத ஜனங்க எதிர் தரப்பு ஆளுக்கு ஓட்டு போட்டுட்டாங்களே...எனக்கு தலையைச் சுத்துதுப்பா..

ஏஜ: ஐயா..எதிர்க் கட்சிக்காரன் எம காதகப் பேர்வழிங்க.. நீங்க உள்ளியை தர்ரதாச் சொன்ன உடனே அவன் எல்லாருக்கும் உள்ளி துவையலையே தந்து ஓட்டு வாங்கிட்டான்..நீங்க தலை சுத்துதுன்னீங்களே..உள்ளிப்பூண்டு ரசம் வெச்சு சாப்பிடுங்க சரியாயிடும்..

000000000000000000000000000000000000000000000

உள்ளியைத் தந்து வாக்கு பெற விரும்புபவருக்கு சில இலவச யோசனைகள்:

1. மக்கள் யார் உள்ளி தருகிறேன் என்று சொன்னார் என்பதை மனதில் நிலையாக வைத்திருக்க வசதியாக தமது தேர்தல் சின்னமாக உள்ளிப்பூண்டை தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.
2. மக்கள் கூடும் இடங்களிலெல்லாம் பன்னீர் தெளிப்பது போல் உள்ளி சென்ட் கலந்த வாசனை நீரை தெளிக்கலாம்.
3. உரிமையில்லா விட்டால் என்ன..உள்ளியிருக்கிறதே.. என்றும்
   உள்ளி கொடுத்தோன் உயிர் கொடுத்தோனே.. என்றும்
   ஜனநாயகமும் உரிமையும் எதற்கு..உள்ளியும் மிளகாயும் இருக்கையிலே
   என்றும் மக்களை நினைவூட்டும் சுவரொட்டிகளை நிறைய ஒட்டலாம்.

000000000000000000000000000000000000000000000

கட்டபொம்மனை நினைவூட்டும் ஒரு சரித்திரக்கதை:



ஆளுங்கட்சி வேட்பாளர் உள்ளியைக்காட்டி வாக்காளர்களைக் கவர முயன்றதைக் கேள்வியுற்ற திருகோணங்குறிச்சி உள்ளி மறுத்த வெள்ளை மருது சீற்றங்கொண்டெழுந்தார். நேரே ஆளுங்கட்சி வேட்பாளரை அவரது தென் திசைப்பாசறையினிலேயே போய்ச் சந்தித்த காட்சி...

ஓஹோ..நீர்தான் உள்ளி மறுத்த வெள்ளை மருதுவோ..
ஓ..நீர் தான் உள்ளியை அள்ளி வீசிய கள்ள வேட்பாளரோ..
ஆமாம்..

இந்த உரையாடல் நடந்த போது ஆ.க.வேட்பாளர் உ.ம.வெ.மருது உட்கார ஆசனம் தராது இருக்க,வெகுண்ட மருது அவ்வறையில் இருந்த ஒரே ஒரு இருக்கையில் விரைந்து தானமர்கிறார். ஏமாந்து நின்ற ஆ.க.வேட்பாளரை

விழிக்காதீர்..உட்கார உமது உள்ளி மூட்டையிருக்குமே..அதில் இரும்..
உள்ளியைக்காட்டி எம்மை ஏமாற்றி வாக்கு பெற நினைத்தீரோ.....
வானம் பொழிகிறது..பூமி விளைகிறது..நீரேன் தர வேண்டும் உள்ளி
....கள்ளமில்லாப் பள்ளிச் சிறுவர்களும் எள்ளி நகையாடுவர் உமது
உள்ளி விவகாரம் கேட்டு..உரிமையின்றி வாடும் எம்மினத்தவர் வயிறு

இந்தியக் கைத்தறி ஆடைகளையும்
இந்தியப் பண்டங்களையும் பிரான்ஸில்
தருவித்து விற்பனை செய்பவர்.

# ALYMARECAR

**Vêtements Exotiques**

**No 5 Bois du Temple-App. :5051**

**93390 CLICHY SOUS BOIS**

**(FRANCE)**

**விற்பனை விசாரணைகள் வரவேற்கப்படும்.**

**COMPARE** **SAVE**

## INDIAN FOODS & CRAFTS

632 Queen St. W.,
Toronto, 366-2311

We sell all types of Indian groceries, including pickles, lentiles, fresh vegetables and various other India delicacies. Compare quality and prices. fast friendly service. We ship parcels outside Toronto (C.O.D.)

## NEWLY OPENED

### South West London's First South Indian Restaurant

## Shree Krishna South India Restaurant

194 Tooting High Street, London, S.W.17
Telephone: 01-672 4250
(Prop: R. Ramanarayanan)

Masala Dosai—Uppuma—Iddly—Vadai—Dahi Vadai—Adai—Avial—Sambar
Rasam—Puri—Chapathi—Paratha

Nearest Tube: Tooting Broadway & Colliers Wood
Catering for Weddings & Parties

# நாயடிக்கும் தடி!



பாரிசுக்குச் சுற்றுலா வந்திருந்து என் நண்பரை அழைத்துக்கொண்டு 'லூவ்ரு கலைக்கூடம்' செல்வதற்காக பஸ் நிலையம் ஒன்றில் காத்திருந்தேன். அன்று ஞாயிற்றுக்கிழமை. கடைகள் எல்லாம் மூடிக்கிடந்தன. தெருவின் அடுத்த கோடியை வெகு நேரம் உற்று நோக்கிக் கொண்டிருந்த என் நண்பர் பாரிசில் நாய்கள் தொல்லையுண்டோ என்ற புதிரான ஒரு கேள்வியைப் போட்டார். நாய்கள் அதிகம் உண்டு. அவைகளால் தொல்லையில்லை. இங்குள்ள நாய்கள் கடிக்காது. உங்களுக்கு ஏன் இப்போது இந்தச் சந்தேகம் வந்தது என்று நான் கேட்டு முடிக்கு முன்பே "நாய்கள் என்றால் எனக்கு பயம். சிறுவயதில் நாய்க்கடி பட்டவன். அதோ பாருங்கள் அந்தக் கோடியில். அங்கு போகிறவர்கள் ஆளுக்கொரு தடியைக் கையில் எடுத்துச் செல்கிறார்களே" அவர் விரல் காட்டிய தெரு முனையை நானும் நோக்கினேன். அவர் தொடர்ந்தார். "அதுவும் அந்தக் கோடி முனை வீட்டிலிருந்து வெளிவரும் ஒவ்வொருவரும் ஒரு தடியுடன் வருகிறார்களே இது என்ன அதிசயம்". விஷயத்தைப் புரிந்து கொண்ட நான் வாருங்கள் நாமும் போய் ஆளுக்கொரு தடியை வாங்கிக் கொள்ளலாம் என்று என் நண்பரை அழைத்துச் சென்றேன். கம்பீரமாக கடைக்குள் நுழைந்த நண்பர் சுற்றுமுற்றும் விதவிதமான ரொட்டித்துண்டுகள்மற்றும் கேக் வகைகளும் வைக்கப்பட்டிருப்பதைப் பார்த்து விழித்தார். நான் 'பக்கத்' என்ற பெரிய நீண்ட தடி போன்ற பிரஞ்சு ரொட்டி ஒன்றை வாங்கி அவரிடம் கொண்டு வந்து கொடுத்தேன். அது நாயடிக்கும் தடியல்ல— ரொட்டி என்பதைக் கண்டு அவர் அயர்ந்து போனார்.

மூன்று நாள் சுற்றுலா முடிந்து ஊர் திரும்பும் நண்பரை நீங்கள் பாரிசில் கண்ட அதிசயம் என்ன என்ற என் கேள்விக்கு நாய்க்கு பயந்த அந்த நல்ல நண்பர் தந்த பதில், "பாரிசில் உள்ள நாய்கள் குலைக்க நான் கேட்டதேயில்லை. ஒரு நாய் மற்ற நாயைச் சந்திக்கும் போது ஒருவரையொருவர் முகர்ந்து பார்த்துக் கொள்வது. குலைக்காமலிருப்பது ஒரு அதிசயம். தெருவில் செல்லும் நாய்கள் அநாவசியமாகத் தன் வாலை எஜமானனுக்கு ஆட்டிக் காட்டுவதில்லை. ஆனால் அவன் அதட்டலுக்கு அடங்கி நடக்கிறது. இந்திய நாய்கள் காரணமில்லாமல் கண்டவரைக் கடிக்கும் நாய்கள். பாரிசு நாய்கள் பார்ப்பவரைப் பார்த்துப் பதுங்காத சாந்தமுள்ள நாய்கள்."

—தமிழ்த்தொண்டன் பாரிசு

## இக்கரைச் சீமையில் எம்.ஜி.ஆர்



உலகம் சுற்றிய வாலிபனை அடுத்து அதே தொடரில் கிழக்காப்பிரிக்காவில் ராஜு என்ற வண்ணப் படத்தை தயாரிக்கவிருக்கின்றார் எம்.ஜி.ஆர். இதற்காகத்தான் குழுவினருடன் கிழக்காப்பிரிக்கா செல்கிறார் எம்.ஜி.ஆர். கிழக்காப்பிரிக்காவில் ராஜுவுக்குப் பிறகு ரஷ்யாவுடன் கூட்டாக கங்கை முதல் கிரெம்ளின் வரை என்ற படம் ஒன்றினைத் தயாரிக்க ஒப்பந்தம் செய்துள்ளார் எம்.ஜி.ஆர். இந்திய சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட ஒரு வீரன், காந்தி, லெனின் ஆகியோரால் கவரப்படுவது போன்று இக்கதை அமைந்து இருக்குமாம்.


## இக்கரைச் சீமையில் எம்.ஜி.ஆர்



லண்டன் வந்திருந்த எம்.ஜி.ஆருடன் லதா, சித்ரா கிருஷ்ணசாமி, ப.நீலகண்டன் ஆகியோர் வந்திருந்தனர். லண்டனில் அவர்கள் தங்கியிருந்தது ஸ்விஸ் காட்டேஜில் உள்ள புத்தம் புதிய ஹோட்டலான 'ஹாலிடே இன்'. எம்.ஜி.ஆரும், லதாவும் தங்கியிருந்த அடுக்கு அறைகளுக்கு(SUITE)பெயர் "நெப்போலியன் சூட்!" நாளொன்றுக்கு நெப்போலியன் சூட்டின் வாடகை எவ்வளவு தெரியுமா £ 50!

## உள்ளிப்பூண்டு விவகாரம் (பதினோராம் பக்கத் தொடர்ச்சி)


எரிவதைத் தடுக்க உள்ளி ரசம் செய்து தந்தீரா?? வெள்ளையுள்ளம் கொண்ட எம்மாதர் மகிழ நேற்று வரை வெங்காயம் உரித்துக் கொடுத்தீரா??. வெள்ளைப்பூண்டை விழுது போல் அரைத்துக் கொடுத்தீரா?? பச்சை மிளகாயை நன்றுயரைத்து சம்பல் செய்தீரா??. புதிறவை வாங்கி வந்து பொங்கினீரா???. என்ன செய்தீர் இது வரை?? உம்மையும் உமது கூட்டத்தையும் பூண்டோடு அழிக்க நாங்கள் உறுதி பூண்டிருக்கும் வேளையிலே உள்ளியை நீட்டுகிறீர்!!. வெட்கமில்லை !!!
(ஆ.க.வேட்பாளர் உ.ம.மருதுவின் கர்ஜனையைக் கேட்டு அலறி கண் விழித்துப் பார்த்துவிட்டு பிறகு தான் கண்டது வெறும் கனவு தான் என அறிந்து நிம்மதிப் பெருமூச்சு விடுகிறார்.)



கும்பகோணத்தில் வார்க்கப்பட்டு பிரித்தானிய சைவமாமன்றத் தலைவரிறல் லண்டன் கொண்டுவரப்பட்டுள்ள பஞ்சலோக செந்தூர் முருகன் சிலை.



இங்கிலாந்தின் புதிய இந்தியத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள திரு பி.கே.நேரு.




